**நூலக நிறுவனம்**

**மாதாந்த அறிக்கை – 2016 யூலை**

வணக்கம்,

நூலக நிறுவனத்தின் 2016 யூலை மாதச் ஆவணவாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| **வகை** | **எண்ணிக்கை** | **பக்கங்கள்** |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 2688 | 31800 |
| கையெழுத்துப் பிரதி | 01 | 169 |
| ஓலைச்சுவடி | 01 | 298 |
| தரமேம்படுத்தல்கள் | 55 | 5374 |
| பக்கம் தவறிய ஆவணம் | 02 | 174 |
| மொத்தம் | 2747 | 37815 |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- ஆவணவாக்கப்பட்டவற்றில் 49 ஆவணங்கள் வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
- ஆவணங்களின் முக்கியத்துவத்தினை உணர்ந்து பக்கங்கள் தவறிய, சிதைந்த ஆவணங்களும் மின்வருடப்பட்டன

- இதழியல் தேடலினை இலகுபடுத்துவத்துவற்காக முன்னெடுக்கப்பட்ட அறிமுகக்குறிப்பு இணைக்கும் பணியில் கடந்தமாதம் 60 இதழ்களுக்கான அறிமுகக் குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- ஆவணவாக்கலில் ஆசிரியர்கள் மற்றும் சேகரிப்பாளர்களான தெணியான், கா.சிவபாலன், செல்வமனோகரன், தவகோபால், சௌந்தரராஜன், குகநேந்திரன், எமில், இராயப்பு, செங்கை ஆழியான் ஆகியோரின் சேகரிப்புக்களும் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் வெளியீடுகளும் மின்வருடப்பட்டுள்ளது.

  வெளியீடுகளை பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

- ஜூலை மாதத்தில் 04 எழுத்தாளர்களும் 03 வெளியீட்டாளர்களும் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

- **வெளியீட்டாளர்கள்**
  - மானிப்பாய் மகளிர் கல்லூரி
  - கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்
  - நிலாமலர் வெளியீடு

- **எழுத்தாளர்கள்**
  - இராஜேந்திரம் ஸ்ராலின்
  - க.குகநேந்திரன்
  - க.சௌந்தரராஜன்
  - வே.குமாரசாமி

**வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம்**

வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம் தொகுக்கும் பணியில் 493 பதிவுகள் மேலதிக தகவல்களுடன் இற்றைப்படுத்தப்பட்டன.

**வரவு செலவு அறிக்கை**

- ஜூலை மாதத் தேவைகளுக்காக ரூ. 456,595.76 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் 285,560.00 உம் உபகரணம் மற்றும் உபகரண பராமரித்தல் செலவாக 23,812 உம் நிறுவனம் தொடர்பான பிரசுரம் வெளியிடுவதற்கான செலவாக 8900.00 உம் வாடகை, தொலைபேசி, இணையம், போக்குவரத்து, மின்சாரம் போன்ற ஏனைய செலவுகளும் உள்ளடங்குகின்றன.
- அவுஸ்திரேலியா அன்பர்களிடமிருந்து ரூ. 572,130.00 நன்கொடையாக இம்மாதம் கிடைக்கப்பெற்றது.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகிறது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.